# மாண்டிசொரி பள்ளி என்னும் சொர்க்கம்

பெற்றோர்களே---ஆசிரியர்களே!

இப்பகுதியில் ஒரு மாண்டிசொரி பள்ளி வகுப்பு எப்படி அமைந்து இருக்கும்,அங்கே எப்படி மாணவர்களும் ஆசிரியர்களும் பழகுவர்,வேலை செய்வர் போன்ற பல விஷயங்கள் என் அனுபவத்திற்கு ஏற்ப பகிர்ந்து கொள்ளப் படுகின்றன.ஏன் என்றால் தன் மக்களைப் புதிதாக ஒரு மாண்டிசொரி பள்ளியில் சேர்க்க இருக்கும் பெற்றோர்களுக்கு இக்கட்டுரை உதவும் என நம்புகிறேன்.மேலும் வெளிநாடுகளில் பல பெற்றோர்கள் வீட்டிலேயே மாண்டிசொரிக் கொள்கையின் அடிப்படையில் பிள்ளையின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருவதை அறிகிறோம்.சிலர் தங்கள் வீட்டினையே மாற்றி வடிவமைத்துக் கொண்டுள்ளனர்.நீங்களும் உங்கள் வசதிக்கு ஏற்ப சில மாற்றங்களைச் செய்யலாம்.இதற்காக கடனோ,போங்க் உதவியோ தேவையில்லை.

**எளிமை என்னும் அழகு:**

க. முன்பே சொன்னது போல் மாண்டிசொரி பள்ளிகள் ,குறிப்பாக இரண்டரை------ஆறு வயதுக்கு உரிய பள்ளி வீடு போன்ற அல்லது அழகான விலாசமான வீடாகவோ இருக்கும்.

உ. மாண்டிசொரியால் அறிவியல் பூர்வமாக வடிவமைக்கப் பட்ட சாதனங்கள் வயது வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் தக்கவாறு அழகாக அடுக்கி வைக்கப் பட்டிருக்கும்.

ங. பள்ளியில் பொதுவாக இருபது மாணவர்கள் இருப்பர்.அதற்கு மேல் வைத்துக்கொள்வதில்லை.காரணம் ஆசிரியரால் போதுமான தனிப்பட்ட கவனம் தர இயலாது.மேலும் சாதனங்கள் போதுமானதாக இருக்காது.

ச. மாண்டிசொரி சாதனங்கள் எதுவுமே ஒன்றுக்கு மேல் இருக்காது.காரணம் பிள்ளைகள் விட்டுக்கொடுத்தல்,காத்திருத்தல் போன்ற வாழ்க்கைக் கல்வியை வகுப்பு சொல்லாமல் சொல்லித்தருகிறது.

ரு. வகுப்பை ‘‘எண்விராய்ன்மென்ட்’’ என்று அழைப்பர்.அச்சொல்லுக்கு ‘‘இயற்கையான சூழல்’’ என்பது பொருள்.குழந்தை இயற்கையாக சுதந்திரத்தினை அனுபவித்து வளர வகுப்பு உதவ வேண்டும்.

சூ. இருபது பிள்ளைகளுக்கும் உரிய இடவசதி,விலாசமான --க்

காற்றோற்றாமான --வெளிச்சமான அறையாக இருக்கும்.
எ. இரண்டு ஆசிரியர்களுடன் ஒரு ஆயா அம்மாவும் [என் பள்ளியில் ஆயாவை ஆயா அம்மா என்றே மிக்க மரியாதையுடன் அழைப்போம்]இருப்பார்.

அ.கண்ணைக் கவரும் வண்ணப் படங்கள் சுவர்களில் இருக்கும்.ஆனால் அவை இயற்கையையோ,அழகான காட்சிகள் மூலம் நல்ல கருத்துகளையோ உணர்த்தும் வகையில் அமைவது நன்று.

சூ. அன்றாடம் கூட்டுதல்,கழுவுதல்,துவைத்தல்,குப்பை வாருதல்,தூசு தட்டுதல் போன்ற பல வேலைகளில் மாணவர்கள் ஈடுபடுவர்.குறிப்பாகத் தண்ணீரை வைத்துக் கைகளைக் கழுவுதல்,பாத்திரம் துலக்குதல் போன்ற செயல்களால் குழந்தையின் மூளை கவனிக்கும் ஆற்றலைப் பெறுகிறது.இப்போது புரிகிறதா ஏன் உங்கள் பிள்ளை அதிகம் பாத்ரூம் பக்கம் போய் பைப்பைத் திறந்து விளையாடுகிறான் என்று?

க0.அமைதியும்,சுறுசுறுப்புடனும்,தன்னிஷ்ட்டப்படி தன் வேலைகளை ஆர்வத்துடன் மாணவர்கள் செய்வர்.

கக. மாணவர்கள் உணர்ச்சிப் பூர்வமான அன்புடனும்,அறிவுப்பூர்வமான அன்புடனும் வளர்வர்.

கஉ. வகுப்பறையில் ஓவியங்கள்,படங்கள் ,அலங்காரப் பொருள்கள் பத்து நாட்களுக்கு ஒருமுறையாவது மற்றப்பட வேண்டும்.கால,பருவம்,விழாக்கள்,நாட்டு நடப்புக்கு ஏற்ப இவை அமையப்பெறலாம்.

கரு. உடைந்த,பழைய சாமானங்கள் மாற்றப்பட வேண்டும்,சரிசெய்யப்பட வேண்டும்.

கச. மாண்டிசொரி பள்ளி,கல்வியமைப்பு,பாடத்திட்டம் பற்றி பெற்றோர்களுக்கு எடுத்து விளக்குதல் ஆசிரியர்களின் முழுமுதல் கடமை.ஈரோட்டுக்கு அருகில் ஒரு கிராமத்தில் என் தோழிக்கு மாண்டிசொரி பள்ளி அமைத்து வழிநடத்தும் பாக்யம் கிடைத்தது.முதலில் நாங்கள் படிக்காத,மாண்டிசொரி பற்றி எதுவுமே அறியாத கிராமியப் பெற்றொர்களுக்கு பலமுறை மீட்டிங்குகள் மூலம் இக்கல்வி பற்றி எடுத்து ஓரளவுக்கு விளக்கிய பின்னரே மிகவும் நல்ல முறையில் அவர்களின் ஒத்துழைப்பும்,தேவையற்ற தலையீடுகளும் இல்லாமல் மிகவும் அமைதியாகப் பள்ளி செயல்பட்டு வருகிறது.
கடு. மாண்டிசொரி பள்ளி என்பது வெறும் பாடங்களை மன்னம் செய்யும் கட்டிடங்கள் அல்ல.அங்கே எதார்த்த வாழ்வியல் கல்வி தரப்பட்டு,பிள்ளைகள் வாழ்கிறார்கள்.இங்கே ர்ந்த ஒரு பாடமும் தமிழ்,கணிதம்,அறிவியல் என்று பிரிக்கப் படுவதி இல்லை.ஏன் என்றால் வாழ்வில் அனைத்துப் பாடங்களும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை.அவை முழுமொத்த அறிவைத் தந்து மாணவனைப் பரந்த அறிவாளி ஆக்கிட வேண்டும் என்கிறார் மாண்டிசொரி.

கசு.ஆறு வயது க்குள் கணிதமும் மொழியறிவும் மிகவும் மனிதனுக்குத் தேவை.அவை இரண்டுமே அனைத்துத் துறைகளுக்கும் ஆதாரம் ஆகும்.எனவே மாண்டிசொரி பல சாதனங்களை இவ்விரண்டு துறைகளிலும் அதிக அளவில் கண்டுபிடித்துள்ளார்.

கஎ. வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமான பழக்கவழக்கங்கள்,பண்பாட்டுக்கூறுகள் ஆசிரியர்களால் செயல் முறையில் காட்டப் படுதல் வேண்டும்.

கஅ. எந்தச் செயலையும் முறையாக அங்கீகாரம் செய்து,பாராட்டுதல் மிகவும் அவசியம்.ஆனால் ஒரேடியாக உச்சி குளிர வைத்திட வேண்டாம்.

உதாரணம்:மூன்று வயது மாணவன் தான் பெயின்டிங் செய்தவுடன் என்னிடம் வருவான்,பேச மாட்டான்,மனதிற்குள் என் கருத்தை எதிர்பார்ப்பான்,அப்போது நான் அவனிடம்,,’’ குட்!நல்லா வரையரே,இது என்ன? அது என்ன ?’’ என ஒரு நிமிடம் பேசிவிட்டு அடுத்த வேலைக்கு ஊக்கப் படுத்துவேன்.

ககூ. வேலை செய்த பின் சற்று அவகாசமோ ஓய்வோ வேண்டும் பிள்ளைகள் அதற்கென உரிய இடத்தில் சென்று ரிலாக்ஸ் செய்வர்.

உ0.பல வேளைகளில் பெரிய பிள்ளைகள் சிறுவயதினருக்குக் கற்றுத் தருதல்,வழிகாட்டுதல்,அரவணைத்தல் ஆகிய பல விஷயங்களில் ஆர்வத்துடன் ஈடுபடுவர்.
உக. குழந்தையின் எவ்வித குறையும் அவனிடமோ,பெற்றோரிடமோ,சக ஆசிரியரிடமோ தனிமையில் பேசப்பட வேண்டும்.

உஉ. கண்டிப்பாக நமது கலைகள்,கலாச்சாரம்,பண்பாடு,நாகரிகம்,ஆகியவை போதிக்கப் பட வேண்டும்.ஆன்மீக உணர்வுடன் கல்வி மையப் பெறுதல் மிகவும் அவசியம் என்கிறார் மாண்டிசொரி.

உங.ஆனால் இன்று பல ~இந்திய மாண்டிசொரிப் பள்ளிகள் மேற்கத்திய கலாச்சாரத்தில் நடைபெறுவதைக் கண்டிக்கிறோம்!

உச.கண்டிப்பாக தாய் மொழியும்,மற்ற மொழிகளும் கற்றுத் தரப்பட வேண்டும்.ஒன்பது வயதிற்குள் எட்டு மொழிகள் குழந்தைக்கு பரிட்சயம் ஆக்கப் படலாம் என்கிறார் மாண்டிசொரி.

உடு.ஆங்கில மொழியை ஆசிரியர்கள் முறையாகப் பேசும் சூழல் இருக்க வேண்டும்.தினமும் அதைக் கேட்டுக் கேட்டுப் பழகியபின்னரே மெதுவாக குழந்தை முதலில் பேசும் ,பின் எழுத்துகளை அறிந்து,படிக்கும்,பின்னரே எழுதும்.எந்த மொழிக்கும் இது பொருந்தும்.

உகூ. சமுகாயத்தில் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று மாதிரி வகுப்புகள்,நாடகங்கள் மூலம் சொல்லித் தரலாம்.

உஎ. வகுப்புக்குள் சில சின்ன பொருப்புகளைக் குழந்தைகளுக்குப் பகிர்ந்து தந்து தலைமைப் பண்பை வளர்க்கவும்.

உஅ. குழந்தைகள் மீண்டும் மீண்டும் விரும்பிச் செய்யும் வேலைகளை முறையாக கவனித்துக் குறிப்பு எடுக்கவும்.

உகூ. ஒவ்வொரு நாளும் குழந்தைகளின் மனோ நிலை மாறுபடும்.அதைக் குறிப்பால் அறிந்து குழந்தையைக் கையாள வேண்டும்.

உதாரணம்:தந்தை ஊருக்குச் சென்ற போது குழந்தையின் உணர்வுகள் மாறுபடும்.அதை மாற்றிட வேண்டும்.மெதுவாக மெதுவாக அவர்களை எதார்த்த சகஜ நிலைக்குப் பழக்கவேண்டும்.

௩0. சில வேளைகளில் குழந்தையைத் தனித்து இருக்கச் செய்து,அமைதியை மனதளவிலும் ஓய்வின் மூலமும் உணரச்செய்யுங்கள்.

உதாரணம்:மழை பெய்யும் போது ஜன்னல் வெளியே மழையை அனுவவிக்கச் செய்யுங்கள்,நனையவும் வைக்கலாம்.வாழ்வின் அனைத்தையும் வயதுக்கு ஏற்ப காட்டுங்கள்.

௩க. ‘‘பிச்சைக்காரனுக்கு மீன்துண்டைத் தருவதைவிட மீன் பிடிக்கக் கற்றுத் தந்து,தூண்டிலும் தாருங்கள் ‘‘ என்ற பழமொழியே மாண்டிசொரிப் பள்ளியில் கடைப்பிடிக்கப் படுகிறது.

௩உ. எவ்விதப் புதிய நிகழ்ச்சியையும் முன்னறிவிப்பு இல்லாமல் பள்ளியிலும் வீட்டிலும் நடத்துங்கள்.

உதாரணம்:ஒரு பாடகர் வந்து பாடப்போகிறார் என்றால் ,அதைப் பற்றி மாணவர்களுக்குக் கூறி,அவர்கள் மூலமே எப்படி அதில் கலந்து கொண்டு மகிழ்ச்சியடைவது என்று சொல்லுங்கள்.

௩௩. வீட்டுக்கு விருந்தினர் வருவதை முன்னமே அறிந்தால்,பிள்ளையை அதற்குத் தயார் செய்யவும்.

௩ச. முறையாக அமைக்கப் பட்ட வகுப்பில்,தகுந்த சாதனங்கள் மூலம் கற்றுக் கொடுக்கப் படும் போது குழந்தைகளுக்கு ஒழுக்கம் என்பது இயற்கையாகவே மனதுள் நிலை பெற்று விடுகிறது.

* மாண்டிசொரியின் முதல் பள்ளி செயல்படும் அற்புதமான செய்திகளை நாளேடுகள் வெளியிட்டன.அதைப் படித்த இத்தாலி ராணி அங்கே வருவதாக அறிவித்தார்.அதைப் பற்றி மாண்டிசொரியும் குழந்தைகளிடம் அறிவித்தார்.பயமுறுத்தவில்லை.ராணியும் வந்தார்.குழந்தைகள் அவரை இயற்கையான அன்புடன் வரவேற்றனர்,அமரவைத்தனர்.ஆனால் பிறகு அவரவர் தம் வேலைகளில் ஈடுபட்டனர்.அரசி வியந்து போனார்.கிளம்பும் நேரம் வந்ததும் பிள்ளைகள் ‘‘குட் பை’’ கூறிவழியனுப்பி வைத்தனர்.பாருங்கள் பிள்ளைகளின் இயற்கையான ஒழக்கமுறையை.

௩௫. ஆசிரியர்களும் பெற்றோர்களும் தங்கள் வயது நிலையில் இருந்து பிள்ளை செய்யும் வேலையில் ''பர்ஃபக்ஷனை'' உடனே எதிர்பார்ப்பது தவறு.
உதாரணம்:பிங்க் டவர் என்ற ஒரு சாதனம் உள்ளது.அளவில் மாறுபடும் க்யூபுகளை ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கும் சாதனம் இது.உடனே இதை இரண்டரை வயதுக் குழந்தையால் செய்து விட இயலாது.ஆனால் அதைப் பார்க்கும் பெற்றோர்கள் படும் டென்ஷனைச் சொல்லிமாள முடியாது.எல்லாவற்றையும் உடனே செய்திட நாம் உதவிவிட்டால் குழந்தைக்கு ஒரு சுவாரசியமும் இருக்காது.அவனை வேலை செய்ய விட்டு கவனியுங்கள்.

௩௬. ஒவ்வொரு விஷயத்திலும் காரணத்தைத் தேடுவது ஆறு வயதுக்குள் அதிகமாக இருக்கும்.நம்மால் முடிந்தவரை அவர்களின் கேள்விகளுக்கு பதில் கூற வேண்டும்.எந்தெந்த விஷயங்களைப் பகிர்ந்து கொள்ள இயலாதோ அதைத் தவிர்க்க வேண்டும்.பல சமயங்களின் சில கேள்விகளுக்கு உரிய பதில் தெரியவில்லை என்றால்.நாம் கண்டிப்பாக பின்னர் கூறவேண்டும்.இல்லை என்றால் நாம் மரியாதையை இழக்க நேரிடும்.எனவே எந்த வயதுக் குழந்தைகளுக்குக் கல்வி தருகிறோமோ அவர்களின் அறிவுத் தாகத்தினைத் தீர்க்கும் அளவுக்கு நாம் அன்றாடம் பாடங்களையும்,உலக விஷயங்களையும் ஆழமாகத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

௩௭. எந்தப் பொருளையும் குழந்தை எடுத்து வேலை செய்யும் போது உடனே அப்பொருளால் ஏற்படும் பலனை எதிர்பார்க்க வேண்டாம்.ஏன் என்றால் அப்பொருளை வைத்து அக்குழந்தை பல் வேறு விஷயங்களைக் கற்கிறார்கள்,
உதாரணம்:மேன்று ---ஐந்து வயதுக் குழந்தைகளுக்கு ஒரு முறை நான் வீட்டு-------காட்டு விலங்குகள் பற்றிக் கூறிக் கொண்டு இருந்தேன்.ஒவ்வொரு விலங்கின் பயனையும் மனிதனுடன் இணைத்துப் பேசும் போது,பன்றி பொம்மை கைகளில் எடுக்கப் பட்டது.சற்று நேரம் பன்றி பற்றி என்ன சொவது என்று யோசிக்கையில்,எப்படி வெளிநாட்டினர் தை வளர்த்து இறைச்சிக்காகப் பயன் படுத்துகின்றனர் என்று கூறினேன்,அப்போது ஐந்து வயது மாணவன் ஒருவன்,'' சார்!உங்களுக்குத் தெரியுமா?பன்றிகளை நாம் மிகவும் மதிக்க வேண்டும்.ஏன் என்றால் அவை நம் தெருக்களில் உள்ள அசிங்கங்களைச் சாப்பிட்டு சுத்தம் செய்கின்றன,நான் அவற்றை ''ஸ்கேவஞ்சர் அனிமல்'' என்பேன்'' என்றானே பார்க்கலாம்!!!

மற்றொரு உதாரணம்:காவிரியைப் பற்றிப் பாடல் ஒன்று ஏழு வயது மாணவர்கள் படித்தனர்.பிறது அவர்கள்-----காவிரியின் புராணம், காவிரியின் வழித்தடம் ,அணைகள் எனப் பல்வேறு நிலைகளில் ஆய்வுகள் செய்து அசத்திவிட்டனர்.மாண்டிசொரிக் கல்வியில் ஒரு விஷயத்தினைக் கற்றுக் கொடுத்தால்,அது சம்பந்தமான பல ஆய்வுகளை மாணவர்கள் நமது வழிகாட்டலின் கீழ் செய்வர்.

௩அ. ஆசிரியர்கள் இருவரும் மிகவும் அன்பாக,ஒருவருக்கு ஒருவர் நட்புடனும் ஆரோக்யமான போட்டிகளுடனும்,அறிவுடனும் இருக்க வேண்டும்.மாணவர்களைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.பள்ளியின் செயல்பாடு,பாடத்திட்டம்,ஒவ்வொரு குழந்தையின் வரலாறு என அனைத்துவிஷயங்களையும் விரல்நுனியில் கைத்து இருத்தல் வேண்டும்.

௩௯.எந்த ஒரு குழந்தையையும் அதன் அறிவு வளர்ச்சியை வைத்துஎடை போட்டு மதிக்கவோ,அன்புகாட்டவோ கூடாது.எல்லாக் குழந்தைகளும் ஒன்றே.

௪0.பெற்றோர்கள் நம்மிடம் அன்புடன் பழக வழிவகுக்க வேண்டும்.ஆனால் எந்த கட்டத்தில் அவர்களுடன் அளவுடன் இருக்க வேண்டும் என்று வரையரை செய்து கொள்ளாவிட்டால் பல ப்ரச்சனைகள் வரும்.பெற்றோர்களுடன் ஒரேடியாக எல்லை தாண்டிய பழக்கம் வேண்டாம்.பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையே பாலம் நீங்கள்.உங்களை வைத்துப் பெற்றோர் பிள்ளைக்கு பயத்தினை உண்டாக்க அனுமதிக்க வேண்டாம்.

௪௧. பெற்றோர்களிடம் எடுத்தவுடன் பிள்ளையின் குறையைக் கூற வேண்டாம்.அவனிடம் நிச்சயமாக ஒரு நல்ல விஷயமாவது இருக்கும்.அது படிப்பு தான் என்பது இல்லை.அதைக்

கூறி,பின் மெதுவாக அவனைப் பற்றி உங்கள் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துக் கூறவும்.நீங்கள் கூறும் கருத்து தவறு என்று தெரிய வந்தால் மன்னிப்பு கேட்பதில் தவறே இல்லை.

சஉ. மாணவனின் குறைகளை எழுதும் போது அதை நாசூக்காகவும் பழத்துள் மருந்து என வெளிப்படுத்தவும்.

சங. பிற பிள்ளைகளைப் பற்றி மாணவர்களுக்குள் கோள் மூழும் போது,தேவை என்றால் அவ்விடத்துக்குச் சென்று உடனே தலையிடுங்கள்.இல்லை என்றால் தனியாக அழைத்து விசாரியுங்கள்.

சச. உங்களிடம் மாணவர்களுக்குத் தங்கள் அம்மா-அப்பாவுக்கு அடுத்த அன்பும்,நம்பிக்கையும்,வழிகாட்டலும் தேவையாகிறது.அவர்களுக்கு நீங்கள் ‘‘அம்மா-அப்பா-நண்பன்-ஆசிரியர்-மருத்துவர்-ஆலோசகர்-வழிகாட்டி-உணர்ச்சிகளின் வெளிப்பாடு’’ என பல உறவுகள் ஆகின்றீர்கள்.

சரு. ஒரு மாணவன் ஒரு வேலையைச் செய்ய மறுத்தால்,உடனே அதற்கான காரணத்தை அறிய முயற்சி செய்யுங்கள்.

உதாரணம்:அன்றாடம் வந்தவுடன் ஆசிரியரின் வருகைக்கு முன்பே தன் வேலையைச் செய்யும் மாணவி ஒருத்தி அன்று ஒருநாள் பேசாமல் வெறுமனே உட்கார்ந்திருந்தாள்.பல வேலைகளை அவளுக்குத் தந்தும் பலனில்லை.பின்னர் காரணத்தை ஆராய்ந்த போது தான் தெரியவந்தது,அன்று காலை அவள் பெட்ரூமில் ஒரு பட்டாம்பூச்சி இறந்து கிடந்ததாம்,அவளது கருணை மனம் அப்செட் ஆகிவிட்டது.அவளுடன் பேசி,அவளுக்கு ஆறுதல் கூறி வழிப்படுத்தினோம்.பாருங்கள் இக்குழந்தைகள் எவ்வளவு மென்மையானவர்கள் !அதனால் வீட்டுப் பெரியவர்கள் அவர்கள் முன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் அல்லவா?

சகூ.ஒவ்வொரு பொருளின் மதிப்பையும் கற்றுத் தாருங்கள்.எதையும் வீணாக்க விடவேண்டாம்.எந்த ஒரு பொருளின் பயன்பாட்டையும் எடுத்துக் கூறி .நீங்களும் அதைப் பின்பற்றுங்கள் .ஆனால் அதற்காக லெக்சர் அடிக்க வேண்டாம்.

சஎ. ஒவ்வொரு குழந்தைக்கும் உரிய பாடத்திட்டத்தினை உருவாக்க வேண்டும்.அதன் வழியின் அவர்களை இட்டுச் செல்ல வேண்டும்.

உதாரணம்:ஆறு வயது மாணவர்கள் ஒரு வருடத்திற்குள் தமிழின் அனைத்து எழுத்துக்களையும் தெரிந்து கொண்டு , வார்த்தைகளைப் படிக்க வேண்டும் என்பது எனது பொதுப் பாடத் திட்டம்.ஆனால் எல்லா மாணவர்களும் அத்திட்டத்தின் கீழ் படிக்க இயலாது.பல காரணங்கள்;தமிழே தெரியாத குடும்பம் , கவனக் குறைவு, சத்தம் இன்னும் புலனாகாத தன்மை என எத்தனையோ காரணங்கள் உள்ளன.இதை அறிந்து தனித்தனியே திட்டமிட்டு,ஒவ்வொரு மாணவனையும் கையாள வேண்டும்.அதனால் தான் ஒரு வகுப்பில் இருபது மாணவர்களே அனுமதிக்கப் படுகின்றனர்.

சஅ. பெரிய மாணவர்கள் கற்கும் வேளையில் மற்ற வயதுப் பிள்ளைகளும் வருவர்,அமர்வர்,கவனிப்பர்.அவர்களையும் அனுமதிக்கலாம்.

உதாரணம்:ஆறு வயதினருக்கு நான் தமிழ் கற்றுத் தரும் வேளைகளில் இரண்டரை வயதுக் குழந்தை எப்போதும் வந்து அமர்ந்து கொள்ளும்.பல மாதங்கள் கழித்து ஆசிரியர்-பெற்றோர் சந்திப்புக் கூட்டத்தில் அவனுடைய அப்பா வந்தார்.அவன் தினமும் நான் ஆறு வயதினருக்குக் கூறும் பாடங்களை வீட்டில் சொல்வதாகக் கூறினார்.பாருங்கள் அறிவுக்கும் வயதுக்கும் சம்பந்தமே இல்லை.

சகூ.மாணவர்கள் ஒரு சாதனத்தை மீண்டும் மீண்டும் எடுத்துப் பயிற்சி செய்யும் போது,பிள்ளையின் கவனம்,உடல் இயக்கம்,அறிவு ஆகியவை பரிணாமம்

அடைகின்றன.ஆனால் மாணவன் வேறு பயிற்சிகளையும் எடுத்துச் செய்வதில் ஈடுபாடு காட்ட ஆசிரியர்கள் ஊக்குவிக்க வேண்டும்.

உதாரணம்:மாண்டிசொரியின் பள்ளியின் ஒரு நாள் ஒரு சிறுமி ''சிலிண்ட்ரிக்கல் ப்ளாக்ஸ்'' என்ற ஒரு சாதனத்தைப் பலமுறைத் திருப்பித் திருப்பிச் செய்து கொண்டிருந்தாள்.அதை கவனித்த மாண்டிசொரி அவளது கவனத்தை திசைத்திருப்ப பல முயர்சிகள் செய்தும் பலனில்லாமல் போனது.கடைசியில் அச்சிறுமி,ஓடி வந்தாள்.மாண்டிசொரியிடம் கூறினாள்,'' ஆன்டி!இந்த சிலிண்ட்ரிக்கல் ப்ளாஸை எப்படி முறையாகச் செய்வது என்று இன்று நன்றாக அறிந்து கொண்டுவிட்டேன்.அது வரை எனக்காகப் பொறுமை காத்ததற்கு மிக்க நன்றி!'' என்றாள்.அப்பயிற்சியை அவள் நாற்பத்தியேழு முறை செய்தாளாம்.பாருங்கள் சிறுவர்களின் கவனசக்தியை.

௫0. ஆனால் தனக்குப் பிடித்த ஒரே காரணத்தினால் ஒரே வேலையை ஒரு மாணவன் மற்றவர்களுக்கு இடம் தராது தானே செய்வானாயின் அவனை வேறு பயிற்சிகளுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும்.அவனை பல சாதனங்களைப் பார்க்க வைக்க வேண்டும்.

௫க. எந்த ஒரு பொருளையும் வீணாக்காமலும், அவமதிக்காமலும், பத்திரமாக வைத்திருக்க மாணவனுக்குச் சொல்லித் தருதல் அவசியம்.அவர்கள் ஆர்வத்தினால் சில பொருள்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று விடலாம்.அதைப் பெற்றோர் மூலம் மீண்டும் வாங்கிவிடவும்,பின்னர் மாணவனிடம் அதைப் பற்றி எடுத்துக் கூறவும்.

௫உ.நமது பாடத்திலோ,வகுப்புப் பராமரிப்பிலோ,செய்கையிலோ நாம் நம்பிக்கையுடனும்,முழுமையுடனும் இல்லாவிட்டால் நமது கல்வித் திட்டமே வீணாகிவிடும்.
௫ங. மன,உடல் வளர்ச்சி குன்றிய மாணவர்களின் 'பர்ஸ்னாலிடி' வளர்ச்சியுடன்,அறிவும் வளர்க்கப் பட வேண்டும்.

௫ச. உங்கள் பள்ளியில் பிள்ளைகள் மகிழச்சியுடன்,பொறுப்புள்ள சுதந்திரத்தினை அனுபவித்து வாழ வேண்டும்.சுமார் மூன்று மணி நேரமாவது நம் பள்ளியில் நம்முடன் அவர்கள் சந்தோஷ மாகவும் நிம்மதியுடனும் இருக்கட்டுமே!!!

௫௫.அன்புடனும்,பொறுமையுடனும்,அரவணைப்புடனும் பிள்ளைகளைப் பேணும் போது நாளை அவர்கள் நம்மைப் போல் உலகில் வலம் வருவார்கள்.எக்காரணத்தைக் கொண்டும் நாம் நம் உயர்ந்த பண்பாட்டு நிலையிலிருந்து மாறக்கூடாது என்கிறார் மாண்டிசொரி.

இவையெல்லாம் நம்மால் சரிவரக் கடைப் பிடிக்கப் பல முறைகளில் அனுபவம் வளரும்.அதற்குப் பொறுமையும் ஆணவம் இல்லாமையும் மிகவும் அவசியம்.நல்ல ஆசிரியர்கள் உலகின் சிற்பிகள்.வாழ்த்துக்கள்!!!

நன்றி!